# BSNL *ஊழியர் சங்கம்*

# *தமிழ் மாநிலம்*

***சுற்றறிக்கை எண்*: 94** ***தேதி*:-27.08.2018**

## கேரள வெள்ள நிவாரணத்திற்கு ஒரு நாள் அடிப்படை ஊதியம் மற்றும் சில செய்திகள்

அன்புள்ள தோழர்களே,

23.08.2018 அன்று நடைபெற்ற AUAB கூட்டத்தில், விரும்பும் ஊழியர்களின் ஊதியத்திலிருந்து ஒரு நாள் அடிப்படை சம்பளத்தை பிடித்து கேரள மாநில முதலமைச்சரின் பேரிடர் நிவாரண நிதிக்கு அனுப்பும் படி நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்க முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவை 24.08.2018 CMDஐ சந்தித்து AUAB தலைவர்கள் தெரிவித்தனர். இதில் ஆவன செய்வதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

**AUAB தலைவர்கள் CMD BSNLஉடன் சந்திப்பு**:- 23.08.2018 அன்று நடைபெற்ற AUAB கூட்டத்தில் எடுத்த முடிவின் அடிப்படையில் தோழர் P.அபிமன்யு GS BSNLEU, தோழர் C.சந்தேஷ்வர் சிங் GS NFTE, தோழர் பத்மனாப ராவ் AGS SNEA, தோழர் ரவி ஷில் வர்மா GS AIGETOA, தோழர் மல்லிகார்ஜுனா PRES., BSNLMS, தோழர் ரேவதி பிரசாத் AGS ATM மற்றும் தோழர் H.P.சிங் Dy.GS BSNLOA ஆகியோர் BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவாஸ்தவா அவர்களை 24.08.2018 அன்று சந்தித்தனர். ஊதிய மாற்றம், ஓய்வூதிய மாற்றம், ஓய்வுதிய பங்கீடு மற்றும் 4Gஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு ஆகிய விஷயங்களில் மத்திய அமைச்சர் கொடுத்த உறுதி மொழி அமலாக்கப்படாததற்கான தங்களின் ஆழ்ந்த வேதனையை தலைவர்கள் CMDயிடம் தெரிவித்தனர். இது தொடர்பாக விவாதிக்க DOT செயலாளர் மற்றும் AUAB தலைவர்களுக்கு இடையேயான ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென CMDயிடம் கேட்டுக் கொண்டனர். அதற்கான கடிதம் ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளது. 50 நிமிடம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் காலம் வேகமாக கடந்து செல்வதால், காலதாமதமின்றி ஊதிய மாற்றத்தை முடிக்க வேகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என தலைவர்கள் கேட்டுக் கொண்டனர். மேலும் நேரடி நியமன ஊழியர்களுக்கான ஓய்வூதிய பலன்கள் பிரச்சனையில் ஓய்வூதிய நிதிக்கான நிர்வாகத்தின் பங்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். அனைத்தையும் கேட்டுக் கொண்ட CMD தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதி அளித்தார்.

**AUAB கூட்ட முடிவுகள்**:- BSNL MS அலுவலகத்தில் 23.08.2018 அன்று தோழர் ரவி ஷில் வர்மா GS AIGETOA தலைமையில் நடைபெற்ற AUAB கூட்டத்தில் தோழர் P.அபிமன்யு GS BSNLEU, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS BSNLEU, தோழர் C.சந்தேஷ்வர் சிங் GS NFTE, தோழர் K.S.சேஷாத்ரி Dy.GS NFTE, தோழர் A.ராஜமௌலி Tres. NFTE, தோழர் K.செபாஸ்டின் GS SNEA, தோழர் ரவி ஷில் வர்மா GS AIGETOA, தோழர் சுரேஷ் குமார் GS BSNLMS, தோழர் மல்லிகார்ஜுனா PRES BSNLMS, தோழர் ரேவதி பிரசாத் AGS ATM மற்றும் தோழர் H.P.சிங் Dy.

GS BSNLOA ஆகியோர் கலந்துக் கொண்டனர். கேரள வெள்ளத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஒரு நிமிட அஞ்சலி செலுத்திய பின் நடைபெற்ற விவாதங்களுக்கு பின் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:-

1. விரும்பும் ஊழியர்களின் ஊதியத்திலிருந்து ஒரு நாள் அடிப்படை சம்பளத்தை பிடித்தம் செய்து கேரள முதலமைச்சர் பேரிடர் நிவாரண நிதிக்கு அனுப்பும் படி CMD BSNLக்கு கடிதம் எழுதுவது.
2. ஊதிய மாற்றம், ஓய்வூதிய மாற்றம், உண்மை ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்கீடு, 4G ஒதுக்கீடு மற்றும் ஓய்வூதிய பலன்கள் ஆகியவை தொடர்பாக கடுமையான விவாதம் நடைபெற்றது. இந்த விஷயங்கள் தொடர்பாக விவாதிக்க தொலை தொடர்பு துறையின் செயலாளருடன் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யும் படி உடனடியாக BSNL CMDஐ சந்தித்து வற்புறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. மத்திய அமைச்சர் கொடுத்த வாக்குறுதிகள் அமலாக்கப்படாதது தொடர்பாக மத்திய தொலை தொடர்பு அமைச்சரின் OSDயை விரைவில் சந்தித்து விவாதிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.
3. ஓய்வூதிய பங்கீட்டை உண்மையான ஊதியத்தின் அடிப்படையில் வழங்குவது தொடர்பாக நிதித்துறை இணை அமைச்சர் மற்றும் பிரதமர் அலுவலக இணை அமைச்சர் ஆகியோர் மூலமாக நிதி அமைச்சகம் மற்றும் பிரதமர் அலுவலகத்துடன் விவாதிப்பது. மேலும் ஓய்வூதிய பங்கீடு கணக்கிடுவது தொடர்பாக DOP&T உத்தரவு அமலாக்கப்படாதது தொடர்பாக அமைச்சரவை செயலாளருக்கு கடிதம் எழுதுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.
4. ஓய்வூதிய பலன்கள் தொடர்பாக ஏற்கனவே CMD BSNLக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. AUAB தலைவர்கள் CMD BSNLஐ சந்தித்து விரைவில் இது தொடர்பாக விவாதிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. 2nd PRC அமலாக்கம் தொடர்பாக பாராளுமன்றத்தில் மத்திய தொலை தொடர்பு அமைச்சர் கொடுத்த உண்மைக்கு புறம்பான பதில் தொடர்பாக மத்திய தொலை தொடர்பு அமைச்சருக்கு கடிதம் எழுதுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

**தொலை தொடர்பு துறையின் செயலாளரை சந்திக்க**…:- தொலை தொடர்பு துறையின் செயலாளரை சந்திக்க நேரம் ஒதுக்கும் படி கேட்டு தொலை தொடர்பு துறையின் செயலாளருக்கும், அவரை சந்திப்பதற்கதான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என வலியுறுத்தி CMD BSNLக்கும் AUAB தலைவர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

**ஊழியர்களின் தேங்கிக் கிடக்கும் பிரச்சனைகள் இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு செல்கிறது**:- ஊழியர்களுக்கு E1 ஊதிய விகிதம், Sr.TOA ஊதிய விகிதம் 71–லிருந்து 6550க்கு குறைக்கப்பட்டது, விடுபட்ட ஊழியர்களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை மற்றும் காசுவல் ஊழியர்களுக்கு பணிக்கொடை ஆகிய பிரச்சனைகள் தொடர்பாக CMD BSNL உடன் நடைபெற்ற விவாதங்கள் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த சந்திப்பிற்கு பின் கார்ப்பரேட் அலுவலகத்தின் பல பிரிவுகளும் இந்த பிரச்சனைகள் தீர்விற்காக உரிய நடவடிக்கைகள் எடுத்தன.

21.08.2018 அன்று தோழர் P.அபிமன்யு GS, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS மற்றும் தோழர் S.செல்லப்பா AGS ஆகியோர் திரு சௌரப் தியாகி Sr.GM(ESTT)ஐ சந்தித்து இந்த பிரச்சனைகளின் தற்போதைய நிலையினை விசாரித்தனர். விடுபட்ட ஊழியர்களுக்கான ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை மற்றும் காசுவல் ஊழியர்களுக்கான பணிக்கொடை

ஆகிய பிரச்சனைகளுக்கான BOARD MEMO இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக தெரிவித்தனர். ஊழியர்களுக்கு E1 ஊதிய விகித பிரச்சனைக்கான BOARD MEMO தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தனர். ஆகஸ்ட் மாத இறுதியில் இயக்குனர் குழுக் கூட்டம் நடைபெறும்.

Sr.TOAக்களின் ஊதிய விகித குறைப்பு தொடர்பாக BSNLEU தலைவர்கள் மற்றும் Sr.GM(Estt) இடையே மேலும் விவாதம் நடைபெற்றது. NEPP அமலாக்கத்திற்கு முன் OTBP திட்டத்தின் கீழ் Sr.TOAக்கள் பெற்ற பதவி உயர்வை, ஊதிய விகித குறைப்பு பிரச்சனையை தவிர்ப்பதற்காக NEPP திட்டத்தின் கீழ் பெற்ற முதல் பதவி உயர்வாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஊழியர் தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கு Sr.GM(Estt) சாதகமாக பதிலளித்தார். இது தொடர்பாக ஓரிரு தினங்களில் விவாதிக்கப்படும். இதில் ஏற்படும் உடன்பாடும் எதிர்வரும் இயக்குனர் குழுக் கூட்டத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட வேண்டும் என நமது தலைவர்கள் கோரியுள்ளனர்.

**JAO RRல் மாற்றம்:-** JAO RRல் சில மாற்றங்களை கொண்டு வர வேண்டுமென வலியுறுத்தி BSNL ஊழியர் சங்கம் ஏற்கனவே கொடுத்த கடிதத்தின் அடிப்படையில் 21.08.2018 அன்று GM(FP) திருமிகு ஸ்மிதி சவுத்ரி அவர்களை சந்தித்து நமது தலைவர்கள் விவாதித்தனர். JAO RRல் கொண்டு வர வேண்டிய மாற்றங்கள் இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

**ஒப்பந்த ஊழியர்கள் ஊதியத்திர்கான் நிதி ஒதுக்கீடு**:- மேற்கு வங்கம் மற்றும் தமிழகம் ஆகிய மாநிலங்களில் ஒப்பந்த ஊழியர்களின் ஊதியத்திற்கான நிதி ஒதுக்கப்படாதது தொடர்பாக 21.08.2018 அன்று GM(BFCI)ஐ நமது தலைவர்கள் நேரில் சந்தித்து விவாதித்துளனர். அவரும் விரைவில் அதற்கான நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளா.ர்

**ஓய்வூதிய பங்கீடு பிரச்சனைக்கு தீர்வு காண நிதி அமைச்சருக்கு கடிதம்:-** BSNLன் ஓய்வூதிய பங்கீடு பிரச்சனை இன்னமும் தீர்வு காணப்படவில்லை. மத்திய தொலை தொடர்பு அமைச்சர் 24.02.2018 அன்று இந்திய அரசாங்கத்தின் உத்தரவு BSNLலிலும் அமலாக்கப்படும் என உறுதி மொழி அளித்த பின்பும் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படவில்லை. இந்த விஷயத்தில் நிதி அமைச்சர் திரு பியூஸ் கோயல் அவர்களின் பார்வைக்கு கொண்டு வரும் வகையில் BSNL ஊழியர் சங்கம் 21.08.2018 அன்று கடிதம் எழுதியுள்ளது. ஊதிய விகிதத்தின் உயர்ந்த பட்ச அளவிற்கு என்பதற்கு பதிலாக வாங்கும் உண்மை ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்கீடு பெறப்பட வேண்டும் என்கிற அரசு உத்தரவை உடனடியாக அமலாக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநிலச் செயலாளர்.**